தாழ நூற்றுக்கணக்கான இடங்கள் அந்தப் பட்டியலில் வந்திருக்கின்றன. இதுவரை 14 தொகுப்புகள் வந்திருக்கின்றன. திருப்புவனம் ஊராட்சியில் 13 கிராமங்கள் எடுக்கப்பட்டு, 4 கிராமங்களுக்கு திட்டங்கள் நிறைவேறிவிட்டன. 9 கிராமங்களுக்கு விரைவில் நிறைவேறும். இவை எல்லாமே ஆக்சிலிரேடெட் ப்ரோக்ராமில் வருகிற காரணத்தினால் இவற்றிலும் முன்னுரிமை வழங்க முன்னால் யோசிக்கப்படவில்லை. தற்போது எல்லாவற்றுக்குமே நிதி கொடுப்பதில் இடையூறு இருக்கிற காரணத்தினால் மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள பட்டியலில் தேவையானால் மாற்றம் செய்ய மறுபரிசீலனை செய்யலாம்.

*130 வினா—திரு. த. சோணையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பாட்டம் அரிசனங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்குவதற்கு அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) கிராம குடிநீர் வழங்கும் விரைவுச் செயல்முறைத் (Accelerated Programme) திட்டத்தின் கீழ் இதுகாறும் 3,545 திட்டங்கள், 13 தொகுப்புகளாகத் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளன. 14-வது தொகுப்பு தயாரித்து முடிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்படவிருக்கிறது. அடுத்த 15-வது தொகுப்பில் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பாட்டம் அரிசன காலனி கிராமத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூ. 46,400-க்கான திட்ட மதிப்பீடு ஒன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆழ்த் துளைக்கிணறு தோண்டி அதிலிருந்து நீரேற்று குழாய்கள் மூலம் தண்ணீரைக் கிராமத்தினுள் அமைக்கப் பெறவிருக்கும் நீர்த்தேக்கத் தொட்டிக்குக் கொண்டுவந்து, கிராம மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இத்திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் அனுமதியும் பொருளுதவியும் கிடைத்தவுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

1974 சனவரி 24]

திரு. த. சோனேயா: திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பாட்டம் கிராமம் அரிசன பெருமக்கள் நிறைந்திருக்கிற இடம், அங்கே குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் கிடையாது. அந்த பாட்டம் அரிசன காலனி மக்களுடைய குறைகளை நீக்க அரசாங்கம் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அங்கே பாதுகாப்பு குடி தண்ணீர் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இப்போது மத்திய அரசுக்கு அனுப்பி, அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு, உதவித் தொகை கொடுத்து, அதை சீக்கிரம் செய்துவிடலாம் என்று எதிர் பார்ப்பது சரியல்ல. நாம் ஏற்கனவே 14 தொகுப்புகள் அனுப்பி யிருக்கிறோம். இது 15-வது தொகுப்பில்தான் சேர்க்கப்பட்டிருக் கிறது. அவர்கள் முதல் இரண்டு மூன்று தொகுப்புகளைத்தான் ஏற்று இருக்கிறார்கள். இன்னும் பத்துப் பன்னிரண்டு பட்டியல் இருக்கிறது. அந்த முறை அல்லாமல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடிதண்ணீர் வசதி அளிக்கிறது என்கிற வேறு அடிப்படையில் 46,400 ரூபாய் அளவு திட்டமில்லாது, வெறும் ஆழ்துளைக் கிணறைப் போட்டுக் கொடுத்துவிடுவது, ஊராட்சி ஒன்றியம் மற்ற தண்ணீர் சப்ளைக்கான செலவுகளை ஏற்றுக்கொள்வது என்கிற அடிப்படையிலாவது குறைந்த காலத்தில் நிறைவேற்ற முடியுமா என்று பரிசீலிக்கலாம். அதற்கு ஊராட்சி ஒன்றியம் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

திரு. த. சோனேயா: பாட்டத்தில் நூற்றுக்கு நூறு அரிசன மக்களே இருப்பதால் அரிசன நலத்துறை மூலமாகவாவது விசேஷ சலுகை என்கிற அடிப்படையில் உதவி பெற்று, அந்தக் குடிதண்ணீர் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒரேநேரத்தில் ஒரு அமைச் சரிடத்திலேயே பல துறை சம்பந்தமான கேள்விகளைப்போட்டு பதில் பெற முடியாது. அரிசன நலத் துறைக்கு அதுபற்றி கேள்வி போட்டால் அவர்கள் பரிசீலனை செய்து பார்த்து, அவர்கள் ஆலோசனையையும் பெறலாம்.